# குறுந்தொகை

# கன்று தன் பய முலை மாந்த



தரம் - 12

முதலாந் தவணை

## சங்கப் பாடல்

T. Padhma Padhmanadhan
K/ Malaimahal Hindhu Central College
Deltota

## கன்று தன் பய முலை மாந்த.........

1. கன்று தன் பய முலை மாந்த ...... என்ற செய்யுளை இயற்றியவர் யார்?

   கபிலர்

2. இச் செய்யுளில் இடம்பெறும் முதல் பொருள் எது?

   குறிஞ்சி நிலம்

3. இச்செய்யுளில் இடம்பெறும் கருப்பொருட்கள் எவை ?

   யானை, தினைப்பயிர், மயில்

4. இச்செய்யுள் யாரால் யாருக்கு கூறப்பட்டது ?

   தோழியால் தலைமகனுக்கு கூறப்பட்டது.

5. இச்செய்யுளின் துறை யாது?

   வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகனுக்கு தோழி கூறியது

6. பிடியின் செயற்பாடுகள் எவை?

   கன்றுக்கு பாலூட்டுதல், தினைப்பயிரை உண்ணுதல்

7. இச்செயற்பாடுகள் எங்கு நடைபெறுவதாக குறிப்பிடப்படுகிறது?

மலைநாட்டில் / குறிஞ்சி நிலத்தில்

8. இங்கு இடம் பெறும் அணி எது?

உவமையணி

9. அணியைச் சுருக்கமாக விளக்குக.

உவமானம் - மயிலிறகு
உவமேயம் - தலைவியின் தழைத்த மெல்லிய கூந்தல்
பொதுதன்மை – மென்மையும் அழகும்
உருபு – அன்ன

10. இச்செய்யுளில் பயன்படுத்தப்பட்டுள்ள இறைச்சிப் பொருளைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

இறைச்சிப் பொருள் எனப்படுவது கூற வேண்டிய உரிப் பொருளுக்கு புறம்பாக வெளிப்பட்டு அதற்கு உதவியாக அமையும் பொருள் தன்மை உடையதாகும்.
பெண் யானையானது கன்று பசியால் வருந்தாத படி அதற்கு பாலூட்டியவாறு தன் பசிக்கு முற்றத்து தினையையும் உண்ணும். அவ்வாறு தலைவனும் பொருள் தேடும் கடமையை நிறைவேற்றுவதோடு தலைவியின் நலனையும் பேண வேண்டும் (வரைவு கடாவுதல்) என்ற குறிப்புப் பொருள் உணர்த்தப்படுகின்றது.

படம் பார்த்து பொருள் எழுதுக.




கன்று தன் தாயினுடைய முலையில் பால் அருந்திக் கொண்டிருக்கும் வேளை பெண்யானை (வீட்டு முற்றத்தில் உலர வைக்கப்பட்ட) தினைப்பயிரை உண்ணும்.



பெரிய மலைநாட்டின் தலைவனே



கேடு எய்திய காலத்தில் பெற்று மறந்த உதவியை



அரச பீடத்தில் அமரும் சிறப்பு பெற்றபின்



மறந்த அரசனைப்போல்
நாம் செய்த உதவியை மறந்து



பொருள் தேடிச் சென்ற இடத்திலே தங்க மாட்டாய் ஆயின்



மென்மையான அகவும் மயிலின் தோகை போன்ற இவளுடைய தழைத்த மெல்லிய கூந்தல் உனக்கே உரிமையுடையது.

பொருள்

கன்று தன் தாயினுடைய முலையில் பால் அருந்திக் கொண்டிருக்கும் வேளை, பெண்யானை (வீட்டு முற்றத்தில் உலர வைக்கப்பட்ட) தினைப்பயிரை உண்ணும் பெரிய மலைநாட்டின் தலைவனே! கேடு எய்திய காலத்தில் பெற்று மறந்த உதவியை அரச பீடத்தில் அமரும் சிறப்பு பெற்றபின் மறந்த அரசனைப்போல் நாம் செய்த உதவியை மறந்து, பொருள் தேடிச் சென்ற இடத்திலே தங்க மாட்டாய் ஆயின், மென்மையான அகவும் மயிலின் தோகை போன்ற இவளுடைய தழைத்த மெல்லிய கூந்தல் உனக்கே உரிமையுடையது.

## ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவு செய்து பொருத்துக

| | |
|---|---|
| மாந்த | மகிழ்ச்சி |
| பிடி | மயில்தோகை |
| கல் | முற்றம் |
| இடத்து | ஒலி |
| உவந்த | அருந்த |
| சீர் | தங்காய் |
| கலி | சிறப்பு |
| கலாவம் | பெண்யானை |
| கட்டில் | மலை |
| முன்றில் | காலத்து |
| அமையாய் | அழகு |
| வீறு | சிம்மாசனம் |